சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.05/2023</u>

05.02.2026

வா.சா.2 திரு. ராஜாராமன், த/பெ. ராஜகோபால்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போன நாடிமுத்துவிற்கு சந்திரா மனைவி ஆவார். இந்த விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் போலீசார் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் எனக்கு விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. 21.10.219 அன்று நான் சொல்வது போல் விபத்து எதுவும் பார்க்கவில்லை என்றாலும் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. நான் விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். சம்பவத்தினத்தன்று நான் விவசாய கூலி வேலைக்கு சென்றேனா என்றால் இல்லை. வாதிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பதால் நான் சம்பவ இடத்தில் இல்லாமல் வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.